# அலகு - 2

## இரு சக்கர வாகன ஓட்டிகள் கவனத்திற்கு - கார் மற்றும் கனரக வாகன ஓட்டிகள் கவனத்திற்கு

## இரண்டு மதிப்பெண் வினா - விடைகள்

**1. இரு சக்கர வாகனத்தை ஓட்ட பாதுகாப்பான வேக எல்லை யாது?**

இரு சக்கர வாகனங்களில் செல்கையில் மிதமான வேகத்தில் மணிக்கு 50 கி.மீ. செல்வது விபத்தைத் தவிர்க்க உதவும்.

**2. இரு சக்கர வாகன ஓட்டிகள் கவனத்தில் கொள்ள வேண்டியது யாது?**

தார்சாலை அல்லது சிமெண்ட் சாலைகளில் செல்லும்போது சாலையின் விளிம்பில் செல்லக்கூடாது. கைகளை ஹேண்டில் பாரிலிருந்து எடுக்கக் கூடாது. ஓட்டும்பொழுது பக்கவாட்டில் பார்த்துச் செல்லுதலை அறவே தவிர்க்க வேண்டும்.

**3. வேகமாகச் செல்லும்பொழுது திடீரென நிறுத்துவது எங்ஙனம்?**

திடீரென வாகனத்தை நிறுத்த வேண்டுமொனால் உடனடியாகக் கியரை 3, 2 என மாற்றிக்கொண்டே பிரேக்கைப்பிடித்தால் பிரேக் வழுக்காமல் உடனே நிற்க உதவும். இப்படிச் செய்வதால் பிரேக் பிடிக்காமல் போனால்கூட வேகத்தைக் குறைத்து ஆபத்தைக் குறைக்கலாம்.

**4. இரு சக்கர வாகன டயர்களுக்கு காற்று எல்லை யாது?**

முன், பின் சக்கரங்களுக்கு முறையே 20, 25 காற்றுதான் வைக்கவேண்டும். கூடுதலாகக் காற்று வைத்தால் சாலைக்கும் சக்கரங்களுக்கும் பிடிப்பில்லாமற்போய், வண்டியை உடனே நிறுத்த இயலாமல் விபத்து ஏற்படலாம்.

**5. ஹெல்மெட்டின் அவசியம் யாது?**

இரு சக்கர வாகன விபத்துக்களால் ஏற்படும் மரணங்களில் பெரும்பாலானவை தலைக் காயங்களாலேயே ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க தலைக் கவசம் அணிவது மிகவும் அவசியம்.

அரசு பலமுறை தலைக்கவசம் அணிவதை கட்டாய சட்டமாக்கியு முழு அளவில் தலைக்கவசம் அணிவது வழக்கில் இல்லாமலே இருக்கிறது.

**6. தடை போட்டு (பிரேக்) வாகனத்தை எவ்வாறு நிறுத்த வேண்டும்?**

சாதாரணமாக வாகனத்தை நிறுத்தும்போது முதலில் ஆக்ஸிலேட்டரில் காலை எடுத்தபின்பு தடை (பிரேக்) யை மெதுவாக அழுத்த வேண்டும். வாகனம் நிற்பதற்குச் சில வினாடிகளுக்கு முன்னால் கியரை நியூட்ரலுக்குக் கொண்டு வந்து வாகனத்தை நிறுத்த வேண்டும்.

**7. இரவில் வாகனத்தை எவ்வாறு ஓட்ட வேண்டும்?**

இரவில் வாகனத்தை ஓட்டவேண்டியிருந்தால் வண்டியை எடுக்கும் முன், பிரதான விளக்குகளும், சாலையில் நிறுத்தியிருக்கும்போது பயன்படுத்தப்படும் விளக்குகள் (Parking Lights) பின்புற சிவப்பு விளக்குகள் மற்றும் இட, வலப்புறங்களில் திரும்புகையில் பயன்படுத்தப்படும் சைகை விளக்குகள் ஆகியவை சரியான நிலையில் இருக்கின்றதா? என்பதைப் பார்த்த பின்பே வாகனத்தை எடுக்க வேண்டும்.

**8. முக்கிய சாலை விதிகள் யாவை?**

அ) இடது பக்கமாகவே செல்க, பிற வாகனங்களை முந்துகையில் மட்டும் வலப்புறமாக முந்த வேண்டும். 12

ஆ) வேகக் கட்டுப்பாடுகள், சாலைக்குறியீடுகள், அறிவிப்பு பலகைகள், சைகைகள் ஆகியவற்றை அறிந்து பின்பற்ற வேண்டும்.

இ) பாதசாரிகள் கடக்கும் இடங்கள், சாலை சந்திப்புக்கள் நிற்குமிடங்கள் ஆகிய இடங்களில் அவற்றிற்கான விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். 13

**9. எப்போது "இடப்புறமாகச் செல்க" என்ற விதியைக் கவனத்தில் கொள்ள வேண்டியது இல்லை?**

முன்னால் செல்லும் வாகனத்தை முந்தும்போதும் வலப்புறமாகத் திரும்பும்போதும், குறுகிய சாலையில் செல்லும் போதும், சாலையின் இருபுறமும் வாகனங்கள் நின்று கொண்டு அல்லது நிறுத்தப்பட்டிருக்கும்போதும் "இடப்புறமாகவே செல்க" என்ற விதியைப் பின்பற்ற வேண்டியதில்லை.

**10. பாதசாரிகள் கடக்கும் (வரிக்குதிரை கோடிட்ட) இடங்களில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் யாவை?**

பாதசாரிகள் கடக்கும் இடங்களை நெருங்குகையில் வேகத்தைக் குறைக்கவும், தேவைப்பட்டால் வரிகுதிரை கோடிட்ட இடத்திற்கு, முன்னால் (நிற்க) என்று குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்தவும் வேண்டும். பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடங்களை நெருங்குகையில் முன்னால் செல்லும் வாகனத்தை முந்தாதீர்கள், பாதசாரிகள் கடக்கும் இடத்திற்கு அருகில் வாகனத்தை நிறுத்தாதீர்கள். முதியவர்கள், சிறுவர்கள், நோயாளிகள், பெண்கள் ஆகியோர் சாலையைக் கடந்து செல்கையில் அதிக கவனமாக இருப்பது அவசியம்.

**11. வாகனத்தைக் கிளப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?**

முதலில் வாகனத்தை சுற்றி நோட்டமிட வேண்டும். பின்புறம் உள்ளவற்றைப் பார்ப்பதற்கான கண்ணாடியைப் பார்க்க வேண்டும். பாதுகாப்பான நிலையில் உள்ளது எனத் தெரிந்ததும் சரியான சைகையை காட்டி, ஒலி எழுப்பியபின் வாகனத்தைக் கிளப்ப வேண்டும். வாகனத்தை எடுக்கையில் ஏற்கனவே சாலையில் சென்று கொண்டிருக்கும் அல்லது முந்திச் செல்லும் வாகனத்திற்கு வழிவிட்டு, பின்னர் வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

**12. சாலை சந்திப்புக்களை நெருங்குகையில் அல்லது சாலை சந்திப்புக்களில் கவனிக்க வேண்டியவை யாவை?**

வேகத்தைக் குறைக்க வேண்டும். பிரதான சாலையில் வரும் வாகனத்திற்கு வழிவிட வேண்டும். நிற்க என்ற சைகை கிடைத்தால் நிற்க வேண்டும்.

**13. சாலை சந்திப்பில் "செல்க" என்பதற்கான பச்சை சைகை கிடைத்ததும் என்ன செய்ய வேண்டும்?**

ஓட்டுநர் அவரது வாகனத்தைச் சுற்றியுள்ள இடத்தையும், பின்புறம் காட்டும் கண்ணாடியையும் பார்க்க வேண்டும். முதலில் பாதசாரிகள் கடக்க வழி விட்டு, சைகை செய்தபின் இடது, வலது பக்கங்களைப் பார்த்தபின் மெதுவாகச் செல்ல வேண்டும்.

**14. கடந்து செல்ல பச்சை விளக்கு சமிக்ஞை கிடைத்தாலும் சாலை சந்திப்பினை எப்போது கடந்து செல்லக்கூ**

குறுக்கேயுள்ள சாலையில் அதிக போக்குவரத்து இருந்தா பச்சை விளக்கு சமிக்ஞை ஆரஞ்சாக மாறும் நிலையிருக்கும் போதும், முன்னால் செல்லும் வாகனம் வலப்புறமாக திரும்பும்போதும் "செல்க" என்பதற்கான பச்சை விளக்கு சமிக்ஞை கிடைத்தாலும் செல்லக்கூடாது.

**15. கோடுகள் போட்டு பிரிக்கப்பட்டுள்ள சாலையில் எப்படிச் செல்ல வேண்டும்?**

மெதுவாகச் செல்லும்போது இடப்புறமாக உள்ள பாதையிலும், நேராகவும் வேகமாகவும் செல்கையில் மத்தியில் உள்ள பாதையிலும், வலப்புறமாக திரும்ப இருந்தால் வலப்புறமாகவும் பாதையில் செல்ல வேண்டும்.

**16. முந்திய பிறகு என்ன செய்ய வேண்டும்?**

முந்திய பிறகு இயன்ற வரையில் பழைய நிலைக்கு (சாலையின் இடப்புறம்) வர வேண்டும். ஆனால், முந்தியவுடன் முந்திய வாகனத்திற்குக் குறுக்கே திடீரெனச் செல்லக் கூடாது.

**17. பின்புறமாகக் காரை (Car)ச் செலுத்துகையில் கவனிக்க வேண்டியவை யாவை?**

கிளை சாலையிலிருந்து அல்லது பக்கங்களிலிருந்து பிரதான சாலைக்குப் பின்புறமாகச் செல்லக்கூடாது. பார்வையில் சரியாக தெரியாத பின்புறத்தில் குழந்தைகள், மற்றும் இதர பாதசாரிகள் வரக்கூடும். எனவே கவனமாக வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

**18. எப்போது ஒலிப்பானைப் பயன்படுத்த வேண்டும்?**

முன்னால் செல்பவர்களுக்குச் சைகை செய்யவும், பாதசாரிகளை சாலையில் காணும் போதும், சாலை வளைவுகள், சாலை முனைகள் போன்ற இடங்களில் ஒலியெழுப்ப வேண்டும். இரவு நேர வாகனத்தை ஓட்டும்போதும், புகை, பனிமூட்டம் போன்ற காரணங்களால் எதிரில் வரும் வாகன ஓட்டியால் உங்கள் வாகனத்தைச் சரியாகப் பார்க்க இயலாதபோது நீங்கள் இருப்பதைத் தெரிவிக்க ஒலியெழுப்ப வேண்டும்.

### 19. எப்போது ஒலி எழுப்பக்கூடாது?

பள்ளி, மருத்துவமனை அல்லது அதுபோன்ற பொது இடங்களுக்கு அருகிலும், வாகனத்தை நிறுத்தி வைத்திருக்கும் போதும் ஒலி எழுப்பக் கூடாது.

### 20. எப்போது விளக்குகளைப் பயன்படுத்த வேண்டும்?

இரவில் பாதையில் உள்ளவற்றைப் பார்க்கவும், நீங்கள் இருப்பதை எதிர்வரும் வாகனத்திற்கு காட்டவும் விளக்குகளை இயக்க வேண்டும். புகை, பனி, பனி மூட்டம் ஆகியவற்றால் இருள் கவ்வியிருந்தால் பகலிலும் விளக்குகளை எரியச் செய்ய வேண்டும். விளக்கு, சைகைகளைக் காட்டவும் இவை பயன்படுகின்றன.

### 21. கீழ்க்கண்டவற்றிற்கு போக்குவரத்துக் காவலர் காட்டும் சைகைகள் யாவை?

அ) காவலருக்கு முன்னால் வரும் வாகனங்கள் நிற்க.

ஆ) காவலருக்குப் பின்னால் வரும் வாகனங்கள் நிற்க.

இ) காவலருக்கு முன்பும், பின்புறமும் வரும் வாகனங்கள் நிற்க.

ஈ) முன்னால் உள்ள வாகனங்கள் செல்வதற்கான சைகை.

உ) பின்னால் வரும் வாகனங்கள் செல்வதற்கான சைகை.

ஊ) இடப்புறம், வலப்புறம் உள்ள வாகனங்கள் செல்வதற்கான சைகைகள் பார்க்க: போக்குவரத்து காவலர் காட்டும் சைகைகள்.

### 22. எங்கு, எப்போது வாகனத்தை நிறுத்தலாம்?

அ) வாகனங்கள் நிற்குமிடம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள (Parking) இடங்கள் (அறிவிப்புப் பலகை உள்ள இடங்கள்)

ஆ) சாலைப் போக்குவாத்து இல்லாத அல்லது போக்குவரத்தைப் பாதிக்காத திடல்கள், பாதுகாப்பான இடங்கள் ஆகிய இடங்களில் வாகனத்தை நிறுத்தலாம்.

### 23. காரில் உள்ள முக்கியப் பாகங்கள் எவை?

1. திருப்பும் வளையம் (Steering Wheel)
2. கிளச்
3. தடைகள் (காலில் இயங்குவது கையால் இயங்குவது)
4. ஆக்சிலேட்டர்
5. சக்கரங்கள்

6. விளக்குகள்
7. ஒலியெழுப்பி
8. பின்புறம் காட்டும் கண்ணாடி

**24. மோசமான காலநிலை, புகை, பனி மூட்டம் ஆகியவை இருக்கும்போது கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?**

இரவில் வாகனம் ஓட்டுகையில் மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கைகளைச் செய்ய வேண்டும். அத்துடன் வேகமாகச் செல்வதையும் முன்னால் செல்லும் வாகனத்தை முந்துவதையும் தவிர்க்க வேண்டும்.

## ஐந்து மதிப்பெண் வினா - விடைகள்

**1. நின்றுகொண்டிருக்கும் வாகனத்தைக் கடக்கும்போது அல்லது கட்டிடமோ, சுவரோ இருந்தால் அதைக்கடந்து செல்கையில் கவனிக்க வேண்டியவை யாவை?**

சாலையில் ஒரு வாகனம் நின்று கொண்டிருந்தால் அல்லது கட்டிடமோ, சுவரோ எதிரிலிருந்தால் அவற்றைக் கவனமாக கடக்க வேண்டும். ஏனெனில், நின்று கொண்டிருக்கும் வாகனம் அல்லது கட்டிடத்திலிருந்து மனிதர்களோ, பிராணிகளோ வெளிப்பட்டு திடீரென சாலையைக் கடக்கலாம். எனவே, அதுபோன்ற இடங்களில் வேகத்தைக் குறைத்து மெதுவாகச் செல்ல வேண்டும். பள்ளிகள், பேருந்து நிற்கும் இடங்கள், மருத்துவமனைகள் போன்ற பொது இடங்களில் இத்தகைய வாய்ப்புகள் அதிகம். நின்று கொண்டிருக்கும் வாகனத்தின் கதவுகள் திறந்திருந்தால் அதிகக் கவனமாகக் கடப்பது அவசியம்.

**2. சாலை சந்திப்பில் வலப்புறமாகத் திரும்புவது எப்படி?**

முதலில் பின்புறமாக உள்ளவற்றைக் காட்டும் கண்ணாடியைப் பார்க்க வேண்டும். பத்திரமாகத் திரும்ப முடியும் என நிச்சயித்துக் கொண்டபிறகு தகுந்த சைகை காட்ட வேண்டும். பின்னர் சாலையின் மத்திய பகுதிக்கு (மத்தியில் உள்ள பாதைக்கு) வந்து நின்று பின்னால் வரும் வாகனங்களுக்கு வழிவிட்டு பிறகு வலப்புற பாதைக்கு மாற வேண்டும். இவையனைத்தையும் சரியாகச் செய்தபின் வலப்புறம் திரும்புவதற்கான சைகை செய்தபின் வலப்புறமாகத் திரும்ப வேண்டும்.

**3. முன்னால் சென்று கொண்டிருக்கும் வாகனத்தை முந்துவது எப்படி?**

முன்னால் செல்லும் வாகனத்திற்கு மிக நெருக்கமாகச் செல்லக்கூடாது. (உங்களுக்கு வலப்புறம்) எதிரில் வாகனம் ஏதேனும் வருகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். உங்களின் இட

வலப்புறங்களை பின்புறம் காட்டும் கண்ணாடியைப் பார்க்க வேண்டும். பாதுகாப்பாக முந்த முடியும் என்பதை நிச்சயித்துக் கொண்டபின் முன்னால் செல்லும் வாகனத்திற்கு ஒலி சைகை அல்லது விளக்கு சைகை செய்தபின் வலப்புறமாகத் திரும்பி சாலையில் மத்திய கோட்டைக் கடந்து முன்னால் செல்லும் வாகனத்தை வேகமாகக் கடந்து செல்ல வேண்டும்.

## 4. எப்போது எது போன்ற இடங்களில் முந்தக் கூடாது?

சாலையில் போக்குவரத்து மிகுதியாக இருக்கும்போதும், முன்னால் செல்லும் வாகனம் வேகமாகச் சென்று கொண்டிருக்கும்போதும் முந்தக்கூடாது. பாதசாரிகள் கடக்கும் இடங்களுக்கு அருகிலும், சாலை சந்திப்புகள், சாலை முனைகள், சாலை வளைவுகளிலும், குறுகியசாலை, பாலம், வளைந்து செல்லும் மலைப்பாதையிலும் முந்தக்கூடாது. சாலையின் மத்தியில் தொடர்ந்து ஒற்றை அல்லது இரட்டை வெள்ளைக் கோடோ, மஞ்சள் கோடோ இடப்பட்டுள்ள இடங்களில், பள்ளி பேருந்து நிற்குமிடம், மருத்துவமனை அல்லது அதுபோன்ற பிற பொது இடங்களிலும் முந்தக்கூடாது.

## 5. எப்போது இடப்புறமாக முந்தலாம்?

வலப்புறமாகவே முந்தவேண்டும். இடப்புறமாக முந்துவது பாதுகாப்பானது அல்ல எனினும் கீழ்க்கண்ட நிலைகளில் இடப்புறமாக முந்தலாம்.

அ) முன்னால் செல்லும் வாகனம் வலப்புறமாகத் திரும்ப இருக்கும் போது;

ஆ) நெருக்கமான சாலை சந்திப்பில் வலப்புறமாகச் செல்லும் வாகனங்கள் மெதுவாகச் சென்று கொண்டிருக்கும்போது;

இ) இடப்புறமாக முந்தினால் வலப்புறமாகச் செல்லும் பிற வாகனங்களுக்குத் தொல்லையில்லாமலிருக்கையிலும், அவர்கள் இடப்புறமாக முந்துமாறு சைகை செய்கையிலும்

## 6. கிராமப்புற சாலையில் செல்கையில் கவனிக்க வேண்டியவை எவை?

படிப்பறிவில்லாத முதியோர், சிறுவர்கள் விஷயத்தில் அதிகக் கவனம் தேவை. தலையில் சுமையுடன் செல்லும் பெண்களால் வல, இடப்புறங்களிலோ, பின்புறங்களிலோ எளிதாகப் பார்க்க இயலாது. எனவே, இவர்கள் சாலையில் நடந்து செல்கையிலும் கவனமாகக் கடந்து செல்ல வேண்டும்.

கால்நடைகள் குறித்தும் கவனம் தேவை. அதிகப்படியாக ஒலி எழுப்பினால் அவை மிரண்டு ஓடவோ, வாகனத்தின் குறுக்கே வந்து சிக்கிக் கொள்ளவோ கூடும். எனவே, அதிகப்படியாக ஒலி எழுப்பக் கூடாது. அவை கடந்து செல்ல வழிவிட்டு, பின்னர் மெதுவாகச் செல்ல வேண்டும். தேவைப்பட்டால் அவை சாலையைக் கடக்கும்வரை வாகனத்தை நிறுத்த வேண்டும்.

## 7. இரவில் வாகனங்களை ஓட்டுகையில் கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?

விளக்குகள் சரியாக எரிகின்றதா? என வாகனத்தைக் கிளப்புமுன் சோதிக்க வேண்டும். விளக்கு வெளிச்சம் தெரியும் தூரத்திற்கு ஏற்ப வேகத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். விளக்கு வெளிச்சம் உள்ள இடங்களில் பிரதான விளக்கின் குறைந்த ஒலி தரும் பல்பையும் பொதுவாக பிரகாசமான பல்பையும் பயன்படுத்த வேண்டும். பக்கங்களில் திரும்பவிருக்கும்போதும், நிறுத்தவிருக்கும்போதும் அதற்கான சைகை விளக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

எதிரில் வரும் வாகன ஓட்டி விளக்கை அணைத்து எரியவிட்டு சைகை செய்தால் வாகனத்தை நிறுத்த வேண்டும். பி சிவப்பு விளக்கை எரியவிட வேண்டும்.

## 8. தொடர்வண்டி (ரயில்) பாதைகளைக் கடக்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?

**கேட் இருந்தால்**

அ) "கேட்" மூடப்பட்டிருந்தாலோ அல்லது மூடுவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலோ (சிவப்பு விளக்கு எரிதல், கேட் மூடும் சத்தம்) வாகனத்தை நிறுத்த வேண்டும்.

ஆ) தொடர் வண்டி செல்வதற்கான பச்சை விளக்கு சமிக்ஞை போடப்பட்டிருந்தால் வாகனத்தை நிறுத்த வேண்டும்.

இ) நின்று கொண்டிருக்கும் வாகனங்களை வளைந்து வளைந்து சென்று முந்திச் செல்ல முயலக்கூடாது.

**கேட் இல்லாமல் இருந்தால்**

வேகத்தைக் குறைக்க வேண்டும்; தேவையெனில் நிற்க வேண்டும். இரயில் எழுப்பும் ஒலியோ அல்லது இரயில் வரும் ஓசையோ கேட்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். அத்தகைய அறிகுறிகள் எதுவுமில்லை

என்று நிச்சயித்துக் கொண்டபின்பே தொடர் வண்டி (இரயில்) பாதையைக் கடக்க வேண்டும். பாதையைக் கடக்கையில் வாகனத்தை எக்காரணங் கொண்டும் நிறுத்தக்கூடாது.

## 9. எங்கு வாகனத்தை நிறுத்தக்கூடாது?

அ) "வாகனத்தை நிறுத்தக்கூடாது" (No Parking) என்ற அறிவிப்புப் பலகையுள்ள இடங்களில்

ஆ) குறுக்குச் சாலைகள், பாதசாரிகள் கடக்கும் இடங்கள், சாலை வளைவுகள், சாலை முனைகள், நடைபாதைகள், பிரதான சாலை ஆகியவற்றிலும், இவற்றிற்கு அருகிலும்.

இ) நின்று கொண்டிருக்கும் வாகனத்திற்கு அருகிலோ இணையாகவோ, எதிரிலோ

ஈ) சாலையின் மத்தியிலோ, சாலையில் தொடர்ச்சியாக வெள்ளைக் கோடு போடப்பட்ட அல்லது மஞ்சள் கோடிட்ட இடத்திலோ.

உ) பேருந்து நிற்குமிடங்கள், பள்ளி, மருத்துவமனை, எப்போதும் போக்குவரத்து இருக்குமிடம் ஆகிய இடங்களின் அருகிலும்.

ஊ) சாலையின் தவறான பக்கத்திலும்.

எ) நெருக்கமான வணிக மையங்கள் நெருக்கமான சந்துகள் ... இடங்களில் வாகனங்களை நிறுத்தக் கூடாது.

## 10. வாகனத்தை நிறுத்துகையில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள் யாவை?

அ) பிரதான விளக்குகளை அணைக்க வேண்டும். ஆனால் பக்க சிறு விளக்குகளையும் வாகனம் நின்றிருக்கையில் பயன்படுத்த வேண்டிய சிறு விளக்குகளையும் (Parking Lights) எரியவிட வேண்டும்.

ஆ) என்ஜினின் இயக்கத்தை நிறுத்தி, தடைகளைப் போட்டபின் வாகனத்தை நிறுத்திச் செல்ல வேண்டும். என்ஜின் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையிலோ, தடைகள் போடப்படாத நிலையிலோ வாகனத்தை நிறுத்திவிட்டுச் செல்லக் கூடாது.

இ) வாகனத்தை நிறுத்தி விட்டுச் செல்லும்போது கைத்தடையைப் போட்டுவிட்டுச் செல்ல வேண்டும்.

ஈ) ஜன்னல் கண்ணாடிகளை மேலேற்றி விட்டு வாகனத்தையும் கதவுகளையும் பூட்டிவிட்டுச் செல்ல வேண்டும்.

9 / 18

### 11. வாகனத்தை ஓட்டத் துவங்கும் முன் வாகன ஓட்டி கவனிக்க வேண்டியவை யாவை?

சரியான, நடைமுறையில் உள்ள வாகனப் பதிவுப் புத்தகமும், ஓட்டுநர் உரிமமும், காப்பீட்டுப் பத்திரமும் இருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வாகனம் உரிமத்திற்கான அடையாளச்சீட்டு (Token) வாகனத்தில் பார்வையில் படுமிடத்தில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

தெளிவான, எளிதில் படிக்கக்கூடிய விதத்தில் எண் பலகைகள் வாகனத்தின் முன்புறமும் பின்புறமும் பொருத்தப்பட்டு அல்லது எழுதப்பட்டிருக்க வேண்டும்.

வாகனத்தின் முன்புறக் கண்ணாடி உடையாமலும், சுத்தமாகவும், துடைப்பான்கள் (Wipers) சரியாக இயங்கும் நிலையிலும் இருக்க வேண்டும்.

கிளச், திருப்பும் வளையம், தடைகள், ஆக்சிலேட்டர் ஆகிய வாகனத்தின் கட்டுப்பாட்டு சாதனங்கள் சரியான முறையில் இயங்கும் நிலையில் இருக்க வேண்டும்.

விளக்குகள், ஒலிப்பான்கள், வேகங்காட்டி ஆகியவை சரியாக இயங்கும் நிலையிலிருக்க வேண்டும்.

சக்கரங்களும், டயர்களும் சரியான நிலையிலிருக்க வேண்டும். சுத்தமான, தெளிவாகக் காட்டும் சிறந்த கண்ணாடிகள் வாகனத்தின் இருபுறமும் பொருத்தப்பட்டிருக்கவேண்டும்.

வாகனம் அதிகப் புகையைக் கக்காத வகையிலும், அதிகமான சத்தத்தை ஏற்படுத்தாமலிருக்கும் வகையிலும் சீராக இயங்கு குறைப்பான் (Silencer) வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்க வே

## பத்து மதிப்பெண் வினா - விடைகள்

### 1. இரு சக்கர வாகன ஓட்டிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவற்றை விவரித்து எழுதுக.

இரு சக்கர வாகனங்களில் செல்கையில் மிதமான வேகத்தில் (50 கி.மீ / மணிக்கு செல்வது விபத்தைத் தவிர்க்க உதவும். தார்ச்சாலை அல்லது சிமெண்ட் சாலைகளில் செல்லும்போது சாலையின் விளிம்பில் செல்லக் கூடாது. மிகவும் அவசியம் இருந்தால் ஒழிய, கைகளை ஹேண்டில் பாரிலிருந்து எடுக்கக்கூடாது. முன்னே செல்லும்

வாகனத்தைத் தொடரும் போதோ, இடமாறுவதற்கு ஒரு வாகனத்திற்குப் பின்னால் செல்லும்போதோ வாகனத்தின் மத்தியில் அதைப் பின்தொடர்ந்து செல்லாமல் வாகனத்திற்கு வலதுபுற அல்லது இடது புறமாகச் செல்வது நல்லது. முன் செல்லும் வாகனம் திடீரென நின்றால் அதன்மீது மோதிவிடாமல் ஒரு பக்கத்தில் திரும்பி நிற்க இது உதவும்.

வேகமாகச் செல்லும்போதும் அல்லது மெதுவாகச் செல்லும்போதும் திடீரென வாகனத்தை நிறுத்தவேண்டுமானால் உடனடியாகக் கியரை 3,2 என மாற்றிக் கொண்டே பிரேக்கைப் பிடித்தால் பிரேக் வழுக்காமல் உடனே நிற்க உதவும். இப்படி செய்வதால் பிரேக் பிடிக்காமல் போனால்கூட வேகத்தைக் குறைத்து ஆபத்தைக் குறைக்கலாம். வேகமாகவோ, மெதுவாகவோ செல்லும்போது கியரை நியூட்ரலுக்கு கொண்டு வந்து பிரேக் போடக்கூடாது. இவ்வாறு செய்தால் பிரேக் வழுக்கிக்கொண்டு பிடிக்காமற் போகலாம். மேலும் ஒருபக்கமாக விழுந்துவிடும். அல்லது திசை திரும்பிவிடும் அபாயமும் உண்டு. மலைப்பாதையில் கீழே இறங்கி வரும்போது இன்ஜினை நிறுத்தக் கூடாது. இவ்வாறு செய்தால் பிரேக் பிடிக்காமற்போய் விபத்து நேரலாம். முன் பிரேக்கைப் பிடிக்கக்கூடாது. திருப்பங்களில் செல்லும்போது 4வது கியரில் செல்வதைவிட 3வது கியரில் செல்வது நல்லது. சறுக்கவோ, வழுக்கவோ செய்யாது.

முன், பின் சக்கரங்களுக்கு முறையே 20, 25 காற்றுதான் வைக்க வேண்டும். கூடுதலாகக் காற்றுவைத்தால் சாலைக்கும், சக்கரங்களுக்கும் பிடிப்பில்லாமற்போய், வண்டியை உடனே நிறுத்த இயலாமல் விபத்து ஏற்படலாம்.

பன்றிகள் நடமாட்டம் உள்ள இடமாக இருந்தால் குறைந்த வேகத்திலேயே செல்லவேண்டும். பன்றி எந்தநேரம் குறுக்கே செல்லும் எனக்கூற முடியாது என்பதுடன் பன்றியின் உடலில் கொழுப்பு அதிகமா... இருப்பதால் வாகனத்தைச் சறுக்கச் செய்யும் வாய்ப்பு அல்லது ... செல்பவர் வாகனத்திலிருந்து தூக்கி எறியப்படும் வாய்ப்பு அதிகம்.

பெண்கள் இரு சக்கர வாகனங்களில் உட்காரும் முன் முந்தானையை இழுத்து இடுப்பில் சொருகிக்கொள்ளத் தவறக்கூடாது. இரு சக்கர வாகனங்களில் செல்லும் பெண்கள் ஜட்டி அணியத் தவறக் கூடாது. பின்னால் பெண்களை ஏற்றிச்செல்பவர்கள் விளையாட்டாகக்கூட திடீரென வாகனத்தைக் கிளப்பவோ, திடீரென பிரேக் போடவோ கூடாது. இவ்வாறு செய்தால் பின்னால் அமர்ந்திருப்பவர் நிலைகுலைந்து கீழே விழுந்துவிடக்கூடும்.

11 / 18

இரு சக்கர வாகன விபத்துக்களால் ஏற்படும் மரணங்களில் பெரும்பாலானவை தலைக் காயங்களாலேயே ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க தலைக் கவசம் (ஹெல்மெட்) அணிவது மிகவும் அவசியம். தலைக்கு வந்தது தலைகவசத்துடன் போய்விடும் அல்லவா?

**2. கார் மற்றும் கனரக வாகன ஓட்டிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவற்றை விளக்குக.**

காரோட்டுவது ஒரு கலை. வேகமாக ஓட்டுவது என்பது முக்கியமல்ல; விபத்துக்கள் ஏதுமின்றி ஓட்டுவது என்பதே சிறப்பு. தான் ஓட்டுகையில் ஒருமுறைகூட விபத்தே நேர்ந்ததில்லை என்பதே ஒரு திறமையான காரோட்டிக்கு அடையாளம்.

எப்போதும் மிக மெதுவாக வாகனம் ஓட்டுவது மட்டுமே விபத்துக்களைத் தவிர்க்க உதவுவதில்லை. மிக அதிகமான வேகத்தைப் போலவே மெதுவான வேகத்தில் செல்லும்போதும் விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. எந்த நேரத்திலும் நினைத்த மாத்திரத்தில் வாகனத்தை ஆபத்து ஏதுமின்றி திருப்பவோ, நிறுத்தவோ கூடிய கட்டுப்பாடான வேகமே சரியான வேகமாகும்.

வண்டியை எடுக்கும்போதே முதலில் அதன் தடைச் சாதனங்களும், முன்புற, பின்புற விளக்குகளும், ஒலியெழுப்பும் அமைப்பும் (Horn) சரியாக வேலை செய்கின்றதா? என்பதைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

வண்டியின் வேகம் அல்லது திசையை மாற்றும் முன், பின்காட்சி கண்ணாடியில் கவனிக்க வேண்டும், வலது பக்கம் மிக நெருக்கமாக வண்டிகள் வந்தால் அவைகளின் உருவம் கண்ணாடியில் தெரியாது. அப்படி வாகனங்கள் ஏதேனும் வருகிறதா? என்பதை விரைவாக நோட்டமிட்டு, பிறகு திருப்பவேண்டும். முன்னால் சென்று கொண்[illegible] வாகனத்திற்கு மிக நெருக்கமாகச் சென்று கொண்டிருக்[illegible] அப்படிச் செல்வது (முன்னால் செல்லும் வாகனம் வேகத்தைக் [illegible] நிற்றல், திரும்புதல் போன்ற நிலையில்) ஆபத்தை விளைவிக்கும்.

வேகத்தை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். சாலையில் வளைவுகள் போன்றவற்றைக் காட்ட வைக்கப்பட்டிருக்கும் சாலைக்குறிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் வேகத்தடை எச்சரிக்கைகளையோ, போக்குவரத்துக் காவல்துறை சைகைகளையோ மீறிச் செல்லக்கூடாது.

உடல்நலக்குறை காரணமாக முழுக்கவனம் செலுத்தி வாகனத்தைச் செலுத்த இயலாதுபோன நிலையிலோ, மது அருந்திய மயக்கத்துடனோ கவலைகள் நிரம்பிய மனநிலையிலோ, தூக்க கலக்கத்துடனோ

வாகனத்தை ஓட்டிச் செல்லக்கூடாது. தூக்கம் வரும் உணர்வு ஏற்பட்டால் வாகனத்தை உடனே நிறுத்தி, ஓய்வு எடுத்த பின்பே புறப்பட்டுச் செல்லவேண்டும்.

வாகன ஓட்டியின் அருகில் ஒருவர் அமர்ந்து பேசிக்கொண்டு வருவது அவரது கவனம் திசை திரும்பக் காரணமாகி, விபத்தையேற் படுத்தலாம்.

கார் ஓட்டும்போது திருப்பும் வளையத்தில் (Steering) கையைக் குறுக்காக வைத்துக்கொள்ளக்கூடாது. சரியானபடி வளையத்தைப் பிடித்திருப்பதே சரியான முறையாகும்.

சாதாரணமாக வாகனத்தை நிறுத்தும்போது முதலில் ஆக்ஸிலேட்டரில் காலை எடுத்தபின்பு தடை (பிரேக்) யை மெதுவாக அழுத்தவேண்டும். வாகனம் நிற்பதற்குச் சில வினாடிகளுக்கு முன்னால் கியரை நியூட்ராலுக்குக் கொண்டு வந்து வாகனத்தை நிறுத்தவேண்டும்.

பின்பக்கமாக (Reversing) வாகனத்தைச் செலுத்தும் முன், பின்னால் வரும் எவருக்கும் அல்லது எந்த வாகனத்திற்கும் அதனால் தொல்லையில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பின்பே செலுத்த வேண்டும். பக்க சாலைகளிலிருந்து பிரதான சாலைக்குப் பின்பக்கமாக வாகனத்தைச் செலுத்தக்கூடாது.

மலைப்பாதைகளில் கீழ் நோக்கி வரும் வாகனங்கள் மேல்நோக்கி செல்லும் வாகனங்களுக்கு வழிவிடவேண்டும். மலையில் ஏறும்போது எந்த கியரைப் பயன்படுத்துகிறீர்களோ அதே கியரிலேயே இறங்கும்போதும் செல்லவேண்டும். மலையிலிருந்து இறங்கும்போது கியரை நியூட்ராலுக்குக் கொண்டு வரவோ, என்ஜினை நிறுத்தவோ கூடாது. இவ்வாறு செய்தால் தடைகள் (பிரேக்) இயங்காமல் போகலாம். மலையில் இருந்து இறங்கும்போது தடையை (பிரேக்கை) மட்டும் நம்பி இருக்கக்கூடாது.

## இரவில் வாகனம் ஓட்டுதல்

இரவில் வாகனத்தை ஓட்டவேண்டியிருந்தால் வண்டியை ஏ... முன், பிரதான விளக்குகளும், சாலையில் நிறுத்தியிருக்... பயன்படுத்தப்படும் விளக்குகள் (Parking Lights) பின்புற... விளக்குகள் மற்றும் இட, வலப்புறங்களில் திரும்பு... பயன்படுத்தப்படும் சைகை விளக்குகள் ஆகியவை சரியான நிலையில் இருக்கின்றதா? என்பதைப் பார்த்து பின்பே வாகனத்தை எடுக்க வேண்டும்.

### இருபக்க பிரதான விளக்குகளையும் பயன்படுத்துதல்

நான்கு சக்கர அல்லது கனரக வாகனங்களை இரவில் செலுத்தும் போது சிலர் அவற்றின் இருபக்க பிரதான விளக்குகளையும் பயன்படுத்தாமல் ஒருபக்க பிரதான விளக்கை மட்டுமே பயன்படுத்து கிறார்கள். இவ்வாறு செய்வது, குறிப்பாக இடது பக்க விளக்கை மட்டுமே எரியச்செய்வது மிகவும் ஆபத்தானதாகும். இவ்வாறு செய்வதால் எதிரில் வருவோர் அவற்றை இருசக்கர வாகனம் எனக் கருதிக் கொண்டு (விளக்கில்லாத பக்கத்தில்) மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்துக்களும் அவற்றால் ஏற்பட்ட உயிர், உறுப்பு இழப்புகளும் ஏராளம். எனவே, இத்தகைய வாகனங்களை ஓட்டிச் செல்கையில் கண்டிப்பாக இருபுற பிரதான விளக்குகளையும் பயன்படுத்தவேண்டும். ஒரு விளக்கு பழுதுபட்டிருத்தல் போன்ற காரணங்களால் ஒரு பக்க விளக்கை மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற நிலையிருந்தால் வாகனங்களை நிறுத்தி வைக்கையில் பயன்படுத்தப்படும் சிறுவிளக்கை (Parkinig lights) இருபுறமும் எரியச் செய்ய வேண்டும்.

### வாகனத்திலிருந்து இறங்குதல்

வாகனத்திலிருந்து இறங்கும்போது சாலையில் வேறு வாகனம் வருகிறதா? என்பதைக் கவனித்து, பின்பே இறங்கவேண்டும். பயணம் செய்வோர் இடப்பக்கமாகவே இறங்கவேண்டும். ஓடிக்கொண்டிருக்கும் பேருந்திலிருந்தோ, சைகைக்காக வாகனம் நின்றுகொண்டிருக்கும்போதோ இறங்கக்கூடாது.

குழந்தைகளை காரின் முன்புற இருக்கையில் உட்காரவைத்து அழைத்துச் செல்வதை தவிர்ப்பது நல்லது. அவ்வாறு உட்காரவைத்து அழைத்தும் செல்ல நேர்ந்தால் இருக்கை பெல்ட்டை கண்டிப்பாகப் போட வேண்டும். காரை கிளப்பு முன் கதவுகள் சரியாக மூடப்பட்டிருக்கிறதா என்பதை சரி பார்க்கவேண்டும். குழந்தைகள் வாகனம் ஓட்டுபவரின் கவனத்தை சிதறடிக்கும்படி பேசிக்கொண்டோ, பாடிக்கொண்டோ, விளையாடிக்கொண்டோ இருக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்; வாகனம் ஓட்டுபவரின் கவனம் சிதறினால் விபத்து நேரலாம்.

உங்கள் திறமையைக் காட்டுவதாக கருதிக்கொண்டு வேகமாகவோ, அதிக ஸ்டைலாகவோ, அலட்சியமாகவோ வாகனத்தை ஓட்டாதீர்கள். இவற்றைவிட பாதுகாப்பு முக்கியம்.

குழந்தையை பள்ளி போன்ற இடங்களில் இறக்கி விடும்போதோ, ஏற்றிச் செல்லும்போதோ, குழந்தைக்காக காத்திருக்கும்போதோ, வாகனத்தை அதிகநேரம் நிறுத்தாதீர்கள். அதேபோல குழந்தையை வாகனத்தில் ஏற்றிக் கொண்ட உடனே புறப்பட்டுச் செல்லுங்கள்.

**வாகனத்தின் சக்கரங்கள் வழுக்குதல் (Skidding)**

சக்கரங்கள் வழுக்கும்போது வாகனத்தின் மீதான கட்டுப்பாட்டை ஓட்டுனர் இழந்துவிடுகிறார். இதனால் வாகனம் கவிழவோ, வழுக்கிச் சென்று வேறு வாகனத்தின் மீது அல்லது பொருளின் மீது மோதி விபத்து நேரவோ செய்யலாம். முன் எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டால் இவ்வாறு நேருவதைத் தவிர்க்கலாம்.

**3. சைகைகள் (Signals) குறித்து விளக்குக.**

வாகன ஓட்டிகள் தாங்கள் காட்ட வேண்டிய சைகைகள், போக்குவரத்து காவலர் காட்டும் சைகைகளுக்கான விளக்கங்கள், போக்குவரத்து கட்டுப்பாட்டு விளக்குகள் காட்டும் சமிக்ஞைகள் ஆகியவை குறித்து தெளிவாக அறிந்திருப்பதும், அவற்றிற்கு ஏற்ப செயல்படுவதும் அவசியம். வாகன ஓட்டிகள் மட்டுமின்றி பாதசாரிகளும் போக்குவரத்துக் காவலரும், போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்குகளும் காட்டும் சமிக்ஞைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

**வாகன ஓட்டிகள் காட்டவேண்டிய சைகைகள்**

சரியான நேரத்தில், சரியான சைகையைக் காட்டுவது ஒரு நல்ல ஓட்டுனருக்கு அடையாளமாகும். வாகனத்தை நிறுத்த வேண்டுமானால் அல்லது வலப்புறமோ, இடப்புறமோ திருப்ப வேண்டுமானால் அவற்றிற்கான சைகையைக் காட்டிவிட்டு சிறிது இடைவெளி நேரம் தந்த பின்பே அவற்றை செய்ய வேண்டும். போதிய இடைவெளி நேரம் அளிக்காமல் கையை காட்டிய உடனே வாகனத்தை திருப்பினால் அல்லது நிறுத்தினால் பின்னால் வரும் வாகனங்கள் தடுமாறவும், மோதிக் கொள்ளவும், வேறுவகையில் விபத்துக்கள் நேரவும் ஏதுவாகலாம். இனி ஓட்டுனர் காட்ட வேண்டிய சைகைகளின் விவரங்களைப் பார்ப்போம்.

**சைகை எண் - 1**

நடைபாதை விளிம்பிலிருந்து வாகனத்தைப் பின்னால் எடுக்கும் போதும், வலப்புறமாக திரும்பும் போதும், சாலையின் வடகோடிக்கு செல்லும்போதும், வலதுகையை வண்டியின் வலப்புறத்தில் (படுக்கை வசமாக) நீட்டி உள்ளங்கை முன்புறம் தெரியும் வகையில் சைகை செய்யவேண்டும்.

**சைகை எண் - 2**

இடப்புறம் திரும்புவதற்கோ அல்லது சாலையின் இடதுகோடிக்கு செல்வதற்கோ அடையாளமாக வலதுகையை வலப்புறமாக நீட்டி இடமிருந்து வலமாக வட்டமிட்டு சுழற்றிக் காட்டவேண்டும்.

**சைகை எண் - 3 (நிற்கும் சைகை)**

வலக்கையை வெளிப்பக்கம் நீட்டி, முன்கையை மடித்து மேல்நோக்கி காண்பிக்க வேண்டும்; உள்ளங்கை முன்னோக்கி இருக்கவேண்டும்.

**சைகை எண் - 4 (பின்னால் வரும் வாகனத்திற்கு வழிவிடுதல்)**

பின்னால் வரும் வாகனத்திற்கு வழிவிட விரும்பினால், வண்டியின் வலப்புறமாக கையை படுக்கை வசமாக நீட்டி, முன்னோக்கி செல்லுமாறு (முன்னும் பின்னும்) கையை அசைத்து சைகை செய்ய வேண்டும்.

**சைகை எண் - 5 (வேகத்தைக் குறைப்பதற்கான சைகை)**

வலது கையை உள்ளங்கை கீழ்நோக்க, பக்கவாட்டில் நீட்டி மணிக்கட்டை தளர்த்தி மேலும் கீழுமாக அசைக்க வேண்டும்.

சைகை காட்டும் நேரங்களில் தவிர மற்ற நேரங்களில் ஓட்டுனர் வாகனத்திற்கு வெளியே கையை நீட்டக்கூடாது. வாகனத்தில் பயணம் செய்யும் ஏனையோரும் தங்கள் தலையையோ, கைகளையோ வெளியே நீட்டக்கூடாது.

**போக்குவரத்து காவலர் காட்டும் சைகைகள்**

**சைகை எண் : 1 பின்னால் வரும் வாகனங்கள் நிற்க**

இடது கரம் தோள்பட்டைக்கு நேராகவும், உள்ளங்கை முன்புறம் நோக்கியிருக்குமாறும், பக்கவாட்டில் நீட்டப்பட்டிருக்க வேண்டும்; விரல்கள் இணைந்திருக்கவேண்டும்.

**சைகை எண் : 2 முன்னாலிருந்து வரும் வாகனங்கள் நிற்க**

வலக்கரம் சற்று முன்னோக்கி தலைக்கு மேலாக உயர்த்தப்பட வேண்டும். விரல்கள் இணைந்தும், உள்ளங்கை முன்னோக்கியும் இருக்கவேண்டும்.

**சைகை எண் : 3 முன்புறமும் பின் புறமும் வரும் வாகனங்கள் நிற்க**

சைகை எண் 1 இல் உள்ளபடி இடக்கரம் பக்கவாட்டில் நீண்டும் வலக்கரம் உயர்ந்தும் இருக்க வேண்டும்.

**சைகை எண் : 4 (அ)**

இடப்புறமாக வந்து கொண்டிருக்கும், வலப்புறம் திரும்பவிரு... வாகனங்கள் நிற்கவும்.

இடதுகரம் சைகை எண் 1 இல் இருப்பதுபோல இருக்க வேண்டும்.

வலது கரம் தாழ்ந்து, சிறிது முன்னோக்கி உள்ளங்கை கீழ் நோக்கியிருக்குமாறு இருக்க வேண்டும்.

**சைகை எண் : 4 (ஆ)**

இடப்புறமிருந்து வலப்புறமாகச் செல்ல விரும்பும் வாகனங்கள் செல்லவும், வலப்புறம் இருந்து வரும் வாகனங்களை நிற்கச் செய்யவும் இடதுகரம் சைகை எண்–1 இல் இருப்பதுபோல இருக்க வேண்டும். வலது கரம் சைகை எண் – 2 இல் இருக்குமாறு இருக்கவேண்டும். ஆனால் உள்ளங்கை வலப்புறமிருந்து வரும் வாகனங்களை நோக்கியவாறு இருக்க வேண்டும்.

**சைகை எண் : 5**

வலப்புறமிருந்து வரும் வாகனங்களும், வலப்புறமாகத் திரும்பும் வாகனங்களும் செல்லலாம். இடப்புறமிருந்து வரும் வாகனங்கள் நிற்கவும்.

வலதுகரம் சைகை எண், 2 – இல் உள்ளபடி இருக்கவேண்டும். இடதுகரம் சைகை எண்.1ல் உள்ளதைவிட சிறிது உயர்த்தி உள்ளங்கை வாகனங்கள் வரும் திசையை நோக்கி இருக்க வேண்டும்.

**சைகை எண் : 6 எல்லாப் பக்கங்களிலிருந்தும் வரும் வாகனங்களும் நிற்க**

இரண்டு கரங்களையும் பக்கவாட்டில் தோள்பட்டைக்குச் சிறிது மேலாக உயர்த்த வேண்டும். இடது கரத்தில் உள்ளங்கை இடப்புறம் வரும் வாகனங்களை நோக்கியும், வலதுகரத்தின் உள்ளங்கை வலப்புறமாக வரும் வாகனங்களை நோக்கியும் இருக்க வேண்டும்.

**சைகை எண் : 7**

இடப்புறமிருந்து வரும் வாகனங்கள் நேராகச் செல்லலாம்.

வலதுகரம் சைகை எண் 2 இல் காட்டியவாறு இருக்க வேண்டும். காவலர் இடது பக்கமாகப் பார்த்தவாறு இடது கரத்து தோளுக்குமேல் உயர்த்தி கையை அசைத்து இடப்புறம் இருந்துவரும் வாகனங்களை வருமாறு சைகை செய்ய வேண்டும்.

**சைகை எண் : 8**

வலது புறமிருந்து வரும் வாகனங்கள் நேராகச் செல்லலாம்.

இடது கரம் சைகை எண்.1 இல் காட்டியவாறு இருக்க வேண்டும்.

வலது கரத்தைத் தோள் பட்டைக்குமேல் உயர்த்தி கையை அசைத்து வலப்புறமிருந்து வரும் வாகனங்களை வருமாறு சைகை செய்ய வேண்டும்.

**சைகை எண் : 9**

முன்னால் உள்ள வாகனங்கள் செல்லலாம். வலது கையைப் பக்கவாட்டில் நீட்டி முட்டியுள்ள இடத்தில் மடக்கி மேல் நோக்கியிருக்குமாறு செய்யவேண்டும். விரல்களை அசைத்து முன்னால் உள்ள வாகனங்களைச் செல்லுமாறு சைகை செய்யவேண்டும்.

**4. போக்குவரத்து கட்டுப்பாட்டு விளக்குகள் காட்டும் சமிக்ஞைகளை விளக்குக.**

பெரும் நகரங்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த போக்குவரத்துக் காவலருக்குப் பதிலாகப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்குகள் இருக்கும். அவை காட்டும் சமிக்ஞைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

1. சிவப்பு விளக்கு எரிந்தால், வாகனத்தை (சாலையில் நிற்க என எழுதப்பட்டுள்ள கோட்டிற்கு முன்னால்) நிறுத்த வேண்டும்.
2. மஞ்சள் (அம்பர்) விளக்கு எரிந்தால் நிற்க என எழுதப்பட்டுள்ள கோட்டைத் தாண்டிய வாகனங்களைத் தவிர ஏனைய வாகனங்கள் நிற்கவேண்டும்.
3. சிவப்பும், மஞ்சளும் எரிந்தால் புறப்படத் தயாராக வேண்டும்
4. பச்சை விளக்கு எரிந்தால் வேகமாக வாகனத்தைச் செலுத்தவும் இவ்வாறு செல்கையில் இடது, வலது புறங்களில் திரும்ப வேண்டியிருப்பின் கவனமாகத் திரும்ப வேண்டும். சாலையை பாதசாரிகள் கடந்து கொண்டிருந்தால் அவர்களுக்கு வழிவிட்டுப் பின்னர் செல்ல வேண்டும்.
5. அம்புக்குறியுடன் கூடிய பச்சை விளக்கு எரிந்தால் அம்புக்குறி காட்டும் திசையில் செல்லலாம் (திரும்பலாம்.)
6. சிவப்பு விளக்கு அணைந்து, அணைந்து எரிந்தால் வாகனத்தை நிறுத்தி, கவனித்து பின்னர் செல்ல வேண்டும்.
7. மஞ்சள் விளக்கு அணைந்து அணைந்து எரிந்தால் கவனித்துச் செல்ல வேண்டும்.

**பாதசாரிகளுக்கு (சாலையைக் கடக்கையில்)**

8. சிவப்பு விளக்கு எரிந்தால் நிற்கவேண்டும்.
9. பச்சை விளக்கு எரிந்தால் செல்ல வேண்டும்.